செய்தி வெளியீடு எண்:152 நாள் : 13.04.2015

## சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விழா – 14.04.2015

### செய்தி வெளியீடு

சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு அரசு விழாவாக 2012 ஆம் ஆண்டு முதல் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விழா 14.04.2015 அன்று நிகழ்வின் தொடக்கமாகக் காலை 10.00 மணிக்கு கவிஞர் முத்துலிங்கம் தலைமையில் “தமிழே! தாயே!” எனும் தலைப்பில் கவியரங்கமும், பேராசிரியர் கு. ஞானசம்பந்தன் அவர்கள் தலைமையில் ‘‘நாடு போற்றும் நான்காண்டு ஆட்சியில் விஞ்சி நிற்பது தமிழ் வளர்ச்சியா? – தமிழக வளர்ச்சியா?’’ எனும் தலைப்பில் பட்டிமன்றமும் சென்னைப் பல்கலைக்கழக முதன்மை நிருவாகக் கட்டடக் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளன.

அதனைத் தொடர்ந்து திருக்குறள் முற்றோதலில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்குப் பரிசு வழங்குதல், பள்ளி மற்றும் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்பெற்ற கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்குதல், 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த தமிழ் நூல்களுக்கும் மற்றும் அவற்றைப் பதிப்பித்த பதிப்பகங்களுக்கும் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் தலைமையேற்று பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றவும், மாண்பமை சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இரா தாண்டவன் அவர்கள் முன்னிலை வகிக்கவும் உள்ளனர். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு.சேகர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், உலகத் தமிழ்ச் சங்கத்தின் தனிஅலுவலர் உட்பட துறை உயர் அலுவலர்கள் மற்றும் தமிழறிஞர்கள் பங்குபெற்று சிறப்பிக்க உள்ளனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**